# தமிழ்நாடு முழுவதும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் - மலரஞ்சலி!



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு திண்டுக்கல்லில் மாவட்டக் கழகத்தின் சார்பில் அவரது திருவுருவச் சிலைக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் அமைச்சர் இ. பெரியசாமி மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், மாநகரச் செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் உட்பட நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.





காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளையொட்டி மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம். பி.எழிலரசன், மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் ஆறுமுகம், மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், காஞ்சிபுரம் மேயர் மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்





மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டியில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னிலையில் கழகத்தினர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு தினத்தை முன்னிட்டு மாபெரும் அமைதிப் பேரணியாக சென்று அன்னாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் மு.பால்பாண்டியன், பாலராஜேந்திரன், புதூர் சேகர், நேரு பாண்டியன், பசும்பொன்மாறன், தன்ராஜ், பொதும்பு தனசேகர், பரந்தாமன், சிறைச்செல்வன், மருது பாண்டியன், சசிக்குமார், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், கலை கார்த்திகேயன், வக்கீல் கார்த்திக், வீரராகவன், ரகுபதி, சத்தியபிரகாஷ், ஜெயராமன், திருப்பாலை ராமமூர்த்தி, பிரகாஷ், அயூப்கான், பண்ணைச்செல்வம், பூச்சம்பட்டி சீனிவாசன், தியாக முத்துப்பாண்டி, பெரியசாமி, ஸ்ரீதர், அரவிந்தன், சரவணன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.





மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு நெல்பேட்டையில் உள்ள அன்னாரது திருஉருவச் சிலைக்கு கழக நிர்வாகிகளுடன் அமைதிப் பேரணியாக சென்று மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ. வேலுசாமி, பெ. குழந்தைவேலு, மா ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், ராகவன், முருகவேல், இளைஞரணி சௌந்தர்ராஜன், மற்றும் மாநில நிர்வாகிகள் பகுதி கழக வட்டக் கழக செயலாளர் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வதுநினைவு நாளை முன்னிட்டு இராணிப்பேட்டை மாவட்டம் வி.சி.மோட்டூர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அதனை தொடர்ந்து வாலாஜாபேட்டை நகர பேருந்து நிலையத்தில் இருந்து பி.டி.ஓ. ஆபீஸ் வரை கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி அமைதி பேரணியில் கலந்து கொண்டார் .உடன் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி, ஜி.கே.குழுமம்சந்தோஷ்காந்தி, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் குமுதாகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம், வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷாவெங்கட், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி, திருமூர்த்தி மற்றும் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.





பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் மற்றும் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பெ.கீதா ஜீவன் தலைமையில் அமைதி ஊர்வலம் ராஜாஜி பூங்கா முன்பிருந்து தொடங்கி பாளை ரோடு வழியாக புதிய மாநகராட்சி சந்திப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை அமைந்திருக்கும் இடம் வரை சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம்,துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ்,மாநில துணைச் செயலாளர் பொறியாளர் அணி தூத்துக்குடி மண்டல பொறுப்பாளர் பா.அன்பழகன்,மாவட்ட துணைச் செயலாளர் ராஜ் மோகன் செல்வின்,மாநகர அயலக அணி அமைப்பாளர் கிறிஸ்டோபர், பகுதிச் செயலாளர் ரவீந்திரன், ராமகிருஷ்ணன்,மாமன்ற உறுப்பினர் அதிர்ஷ்ட மணி,சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



பெருந்தகையார் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு நெல்லை சந்திப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் முழு திருவுருவசிலைக்கு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா,மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,முன்னாள் மேயர் சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சித்திக்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், துணை செயலாளர்கள் தர்மன்,சுரேஷ், ஒன்றிய செயலாளர் அருள்மணி, அணி அமைப்பாளர்கள் கருப்பசாமி, கோட்டையப்பன், பொன்னையா பாண்டியன், செல்வசூடாமணி, செல்வம்,அனிதா,சௌந்தரமுத்துராஜ், நவநீதன்,மீரான் மைதீன்,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், துபாய் சாகுல்,மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன், ஜூலியட்,டாக்டர் சங்கர்,உட்பட உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழக நிர்வாகிகள்,மூத்த முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.





வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணாவின் 56வதுநினைவு நாளை முன்னிட்டு அவரது உருவப் படத்திற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகிமாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய், மு.பாபு, நா.அசோகன், சி.எல்.ஞான சேகரன், பி.வெங்கடேசன், குமரபாண்டியன், நூருல்லா,வி.ஜி.கே.சுந்தரவிஜி, பாலமுரளி கிருஷ்ணன், சி.எம்.தங்கதுரை, முனவர் பாஷா, தயாள்ராஜ், கணேஷ்சங்கர், சத்தியமூர்த்தி, சசிகுமார், மா.ப.அன்புநிதி, என்.சுப்பிரமணி, வீனஸ் நரேந்திரன், கே.ஆர்.அசோக், முன்னா ஷெரீப், ஒன்றிய குழு உறுப்பினர் என்.பிரகாஷ், ஒய்.தேவநேசன், ரமேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.